மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

அசல் வழக்கு எண். 67/2018

நாள் 06.07.2022

பெயர். ஆறுமுகம் த/பெ. அழகேசன்

வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் தாக்கல் செய்த நிரூபண உறுதி கூற்றில் நான் சொல்லி உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் அதை எனக்கு படித்து காண்பித்தார்கள். நான் இரண்டு சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். அது 60 செண்ட் ஆகும். நான் வழக்கு தாக்கல் செய்துள்ள சொத்தின் சர்வே எண்.367/1 ஆகும். சர்வே எண்.367/1 மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கரா 68 செண்ட் ஆகும். புலவன்பாடி கிராமத்தில் பொன்னன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும் அவரது மகன்களையும் தெரியும். பொன்னன் என்பவருக்கு நடேசன், கோபால், மாணிக்கம், குள்ளப்பன் மற்றும் ஆசீர்வாதம் என்ற 5 மகன்கள் என்றால் அது எனக்கு தெரியாது, ஆனால் நடேசன், மாணிக்கம், குள்ளப்பன் மற்றும் ஆசீர்வாதம் ஆகியோர்களை மட்டும் தான் எனக்கு தெரியும். மேற்படி பொன்னனின் வாரிசுகள் சர்வே எண் 367/1ல் நடேசனுக்கு 60 செண்ட், மாணிக்கத்திற்கு 55 செண்ட், ஆசீர்வாதத்திற்கு 50 செண்ட் மூன்று பேரும் பிரித்து கொண்டார்கள். நான் என் வழக்கறிஞரிடம் ஆசீர்வாத்திற்கு 50 செண்ட் பிரித்து கொண்டார்கள் என்ற விவரத்தை கூறினேனா என்றால் கூறினேன். மேற்படி பாக பிரிவினையை ஆவணம் ஏதேனும் எழுதினார்களா என்றால் இல்லை வாய்மொழியாகதான் பிரித்து கொண்டார்கள். நடேசன் என்பவருக்கு சர்வே எண் 367/1ல் 1 ஏக்கரா 10 செண்ட் எப்படி வந்தது என்றால் ஆசிர் வாதத்திடமிருந்த 50 செண்ட்டும் அவருக்கு உண்டான 60 செண்ட்டும் சேர்த்து ஒரு ஏக்கரா 10 செண்ட் ஆகும். பொன்னனுக்கு சர்வே எண் 367/1ல் ஒரு ஏக்கரா 65 செண்ட் உரிமை உடையவர் ஆவார். சர்வே எண் 367/1ல் ஆனந்தராவ் என்பவருக்கு 75 செண்ட் உரிமை உடையவர் ஆவார். மேற்படி ஆனந்தராவ் மேற்படி 75 செண்ட் சந்திரகேச பிள்ளைக்கு கிரயம் கொடுத்துவிட்டார். சந்திரகேச பிள்ளை நாராயணனுக்கு கிரயம் கொடுத்துவிட்டார். மேற்படி விவரத்தை நான் எனது வழக்கறிஞரிடம் தெரிவித்து உள்ளேன். மேற்படி சர்வே எண் 367/1ல் குண்டன் மகன் கண்ணன் என்பவருக்கு ஒரு ஏக்கரா 22 செண்ட் உரிமை உடையவர் ஆவார். மேற்படி 367/1ல் பொன்னனுக்கு ஒரு ஏக்கரா 65 செண்ட் ஆனந்தராவ் 75 செண்ட்டும் கண்ணனுக்கு ஒரு ஏக்கரா 22 செண்ட் போக மீதி நிலம் ஏதேனும் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பொன்னன், ஆனந்தராவ் மற்றும் கண்ணன் ஆகியோர்

நிலங்கள் போக மீதமுள்ள 6 செண்ட் நிலங்கள் யாருக்கு உரிமை உடையது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வழக்கில் பொன்னனுக்கு சர்வே எண் 367/1ல் எவ்வளவு நிலம் உரிமை உடையது என்றும் அதில் பொன்னன் குடும்பத்திற்கு எவ்வளவு பாத்தியம் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் தனிதனியாக சொல்லி உள்ளேன். வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தின்படி 32 செண்ட் நிலத்தை நடேசன் மற்றும் அவரது மகன் சூசைராஜியிடம் ஐக்பந்தி கொண்டு வாங்கி உள்ளேன். வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் உள்ள ஐக்பந்தி நடேசன் நிறுத்தி கொண்ட 22 செண்ட்டுக்கு தெற்கு ஆறுமுகம் என்னுடைய நிலத்திற்கு மேற்கு வண்டிபாதைக்கு வடக்கு ஆரோக்கியம் நிலத்திற்கு கிழக்கு ஆகும். வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தின் அசல் காணாமல் போய்விட்டது கிடைக்கவில்லை அதனால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.1 கிரய பத்திரம் தவறிபோய்விட்டது என்று சொன்னேன் அவர் சான்றிட்ட நகல் வாங்கி தர சொன்னார். நடேசன் ஆசீர்வாதத்திடமிருந்து வாய்மொழியாக 55 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றேன் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நடேசன் என்பவர் பொன்னன் மகன் கோபால் என்பவரிடம்இருந்து சர்வே எண் 367/1ல் 33 செண்ட் நிலத்தை 5.10.1975 தேதி அன்று கிரயம் பெற்றார் என்றால் எனக்கு கோபால் என்பவரே யார் என்று தெரியாது. நடேசன் என்பவர் குள்ளப்பன் மற்றும் ஆசீர்வாதம் ஆகியோரிடமிருந்து 5.10.1975 தேதியில் அன்று 33 செண்ட் நிலத்தை கிரயம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 நடேசன் மற்றும் சூசைராஜ் என்பவரிடம் இருந்து 22 செண்ட் கிரயம் வாங்கி உள்ளேன் என்றால் 28 செண்ட் நிலத்தை ஐக்குபந்தி உடன் கிரயம் வாங்கி உள்ளேன். வா.சா.ஆ.2 கிரய ஆவணத்தில் 28 செண்ட் நிலம் கிரயம் வாங்கியதாக துலங்காது என்றால் நான் 28 கிரயம் வாங்கினேன் அதில் குறைவாக கொடுத்துள்ள விவரம் அதன் பிறகு தான் எனக்கு தெரியும்.

6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்ப வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஓம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.